සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**87 | T | I, II**

**අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2014 දෙසැම්බර්**
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2014 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2014**

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I, II
**தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் I, II**
Communication and Media Studies I, II

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

## தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் I

**கவனிக்க :**
(i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. தொடர்பாடல், அதன் செயற்பாட்டின் அடிப்படையில் 'அறிவுறுத்தல்களுக்குரிய தளம்' என அறியப்படுவதை எடுத்துக்காட்டக்கூடிய மிகப் பொருத்தமான உதாரணத்தைத் தெரிவுசெய்க.
   (1) கணினியின் வரலாற்றுரீதியான தோற்றத்தின் விளக்கம்
   (2) கணினியைப் பயன்படுத்தி அச்சு வெளிப்பாடுகளை (print outs) பெறும் வழி பற்றிய விளக்கம்
   (3) கணினியினால் எவ்வாறு 'எழுதுதல்' என்பது துரித வளர்ச்சி பெற்றது என்பது பற்றிய விளக்கம்
   (4) கணினிசார் அச்சிடலின் கவருந்தன்மை பற்றிய விளக்கம்

2. செய்திப்பத்திரிகையொன்றின் முதற்பக்கத்தில் வெளியான செய்தியொன்றில் மொழி தொடர்பான சில தவறுகள் இருந்தமை பிரதம ஆசிரியரால் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பாக அவர் விசாரணை செய்யவேண்டிய பகுதியினர்
   (1) செய்தி ஆசிரியர்கள்
   (2) ஒப்புநோக்குநர்கள் அல்லது சரவை பார்ப்பவர்கள்
   (3) வடிவமைப்பாளர்கள்
   (4) தட்டெழுத்தாளர்கள்

3. தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் பற்றிய ஆய்வரங்கில் கவனம் செலுத்தப்பட்ட விசேட அம்சங்கள் அனைத்தையும் தொகுத்து, அதே நாளில், மாணவர்கள் மத்தியில் சுற்றோட்டம் செய்திட குறித்த பாட ஆசிரியர் விரும்பினார். இந்த இலக்கிற்கு மிகப் பொருத்தமான அச்சிடும் தொழினுட்பமாக அமைவது
   (1) எண்மான பிரதியீட்டு அச்சிடல் (digital duplicating)
   (2) எதிரீட்டு அச்சிடல் (off-set printing)
   (3) திரை அச்சிடல் (screen printing)
   (4) கணினிவழி அச்சிடல்

4. பத்திரிகையாளர் மாநாடு என்பது
   (1) ஒருவழித் தொடர்பாடலுக்கான ஓர் எடுத்துக்காட்டு
   (2) இரண்டு நபர்களுக்கிடையிலான கலந்துரையாடல்
   (3) தனிப்பட்ட நபரொருவரால் நடாத்தப்படும் ஒரு கூட்டம்
   (4) இருவழித் தொடர்பாடலுக்கான ஓர் எடுத்துக்காட்டு

5. ஊடக நிறுவனம் ஒன்றின் கொள்கைகள் உருவாக்கப்படுவது
   (1) பெறுநர்களால்
   (2) ஊடகவியலாளர்களால்
   (3) விளம்பரதாரர்களால்
   (4) உரிமையாளர்களால்

6. ஆளிடைத் தொடர்பாடல் பெரும்பாலும்,
   (1) செவிப்புல மற்றும் பேச்சுத் தொடர்பாடலின் கூட்டாகும்.
   (2) வாய்மொழி சார்ந்த மற்றும் வாய்மொழி சாராத தொடர்பாடலின் கூட்டாகும்.
   (3) காட்சிவழி மற்றும் வாய்மொழித் தொடர்பாடலின் கூட்டாகும்.
   (4) முறைசார்ந்த மற்றும் முறைசாராத தொடர்பாடலின் கூட்டாகும்.

7. வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட தொலைக்காட்சி நாடகங்கள் குறித்த பார்வையாளரின் இரசனையை ஆராய்ந்தறிவதற்கு பாடசாலை ஊடகக் கழகம் ஒன்றினைச் சேர்ந்த மாணவர்கள் தீர்மானித்தனர். இந்தக் கற்கைக்கான மிகப் பொருத்தமான மற்றும் யதார்த்தமான தரவு சேகரிக்கும் வழியாக அமைவது
   (1) வினாக்கொத்து முறை
   (2) அவதானிப்பு முறை
   (3) அவதானிப்பும் வினாக்கொத்து முறையும்
   (4) வினாக்கொத்தும் நேர்காணல் முறையும்

8. ஒரு திரைப்படத்தின் கட்டமைப்புத் தயார்படுத்தலானது (structural arrangement), அடிப்படையில் தீர்மானிக்கப்படுவது
   (1) எழுத்துரு அமைக்கும்போது
   (2) படத்தொகுப்பு இடம்பெறும்போது
   (3) நடிப்பின் இலக்காக
   (4) தயாரிப்பாளரின் குறிக்கோளின் பேரில்

9. இலங்கையில் அச்சிடல் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது
   (1) போர்த்துக்கேயர் காலத்தில்
   (2) ஆங்கிலேயர் காலத்தில்
   (3) டச்சுக் காலத்தில்
   (4) காலனித்துவத்துக்கு முன்னைய நிர்வாகக் காலத்தில்

[பக். 2 ஐப் பார்க்க

10. 'வெளிச்சவீட்டுத் தொழினுட்பம்' மிகப் பொருத்தமாவது
(1) செவிப்புலத் தொடர்பாடலில் (2) வெகுசனத் தொடர்பாடலில்
(3) கூட்டுத் தொடர்பாடலில் (4) ஆளிடைத் தொடர்பாடலில்

11. "எந்தப் பாடநூலையும் முழுமையாகவும் துரிதமாகவும் புகைப்படப் பிரதிசெய்யும் பணியை எங்களுக்குத் தாருங்கள்". இந்த அறிவிப்பானது புத்தகக் கடையொன்றில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு இந்தக் கடை செய்யும் செயலானது,
(1) தொடர்பாடல் தொழினுட்பத்தின் முன்னேற்றத்தைக் காட்டுவதாக அமைந்தாலும் நூலாசிரியரின் ஒழுக்கநெறிசார் உரிமைகளை மீறுவதாகும்.
(2) நபர்களின் பேச்சு மற்றும் வெளியீட்டு உரிமையைப் பயன்படுத்தும் வாய்ப்பாகும்.
(3) எழுத்தாளரின் பொருளாதார உரிமைகளை மீறுவதால் சட்டவிரோதமானதாகும்.
(4) துரிதமாகப் பிரதியெடுத்தலின் தொழினுட்பத் தகைமை எவ்வாறு மானுடத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது என்பதைக் காட்டும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

12. "ஒரு விமானம் விமானத்தளத்திலிருந்து திட்டமிட்டப்படி புறப்பட்டுச் செல்வது ஒரு செய்தியல்ல". இந்த வெளிப்பாடு அர்த்தப்படுத்துவது
(1) செய்திகளை உருவாக்கும் சம்பவங்கள் எங்கும் இடம்பெறலாம் என்பதை ஆகும்.
(2) அடிக்கடி நடக்கும் எதிர்பாராத நிகழ்வுகளே செய்திகளாகும் என்பதை ஆகும்.
(3) 'செய்தியை நுகரும் மோப்பம்' முக்கிய சம்பவங்களை அடையாளப்படுத்த உதவுகிறது என்பதை ஆகும்.
(4) ஒரு சம்பவம் ஒரு செய்தியாவதற்கு அரிதான ஒரு வாய்ப்பே உள்ளது என்பதை ஆகும்.

13. விரிவுரையொன்றில், புத்தகமொன்றிலிருந்தான குறித்தவொரு வரைபடமொன்றைப் பங்கேற்பாளர்களுக்குக் காட்ட வேண்டிய தேவை உங்களுக்கு உடனடியாக எழுவதாக வைத்துக்கொள்க. இந்த இலக்கிற்காக உங்கள் தெரிவாக அமைவது
(1) துரித/காட்சி எறிவை (2) பல்லூடக எறிவை
(3) மேந்தலை எறிவை (4) வழுக்கி எறிவை

14. ஒரு குறித்த வகைத் தொடர்பாடலின் சில பண்புகளாக பின்வருவன இனங்காணப்பட்டன.
A - இது தோழமையானது; அத்துடன் நேரடியானது.
B - தொடர்பாளரும் பெறுநரும் சம தரங்களில் தமது வகிபங்குகளையாற்றுகின்றனர்.
C - பின்னூட்டம் உடனடியாகக் கிடைக்கின்றது.
மேற்குறித்த அவதானங்களின்படி மிகப் பொருத்தமான தொடர்பாடல் முறையாக அமைவது
(1) கூட்டுத் தொடர்பாடல் (2) அகமுகித் தொடர்பாடல்
(3) ஆளிடைத் தொடர்பாடல் (4) வெகுசனத் தொடர்பாடல்


15. செய்திப் பிரதியொன்றின் துல்லியத்தன்மை, எழுத்து முறை மற்றும் இலக்கணத்தைப் பரிசோதிக்கும் பொறுப்புடைமையைக் கொண்டிருப்பவர்
(1) உதவி ஆசிரியர் (2) பிரதம ஆசிரியர்
(3) செய்தி ஆசிரியர் (4) செய்தி நிருபர்

16. தட்டெழுத்திடல், பக்க வடிவமைப்பு மற்றும் புகைப்படங்களைச் செம்மையாக்கல் ஆகியன அடிப்படைத் தேவைகளாக அமைவது
(1) எழுத்துக்கோர்ப்பு முறை அச்சிடலில் (2) கணினிசார் வெளியீட்டுச் செயலொழுங்கில்
(3) திரை அச்சிடலில் (4) லித்தோகிராபி அச்சிடலில்

17. பத்திரிகைகளில் நாளாந்தம் வெளியாகும் செய்திகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - நுவரெலியா பஸ் விபத்தில் 14 பேர் மரணம்.
B - முன்னாள் கிரிக்கெற் வீரருக்குத் திருமணம்.
C - மட்டக்களப்பில் இடம்பெற்ற பூஜை வழிபாடு.
D - அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படி அதிகரிக்கப்பட்டது.
மேற்குறித்த செய்திகளில் வன்செய்தி மற்றும் மென்செய்தியாக சரியான ஒழுங்குமுறையில் வகைப்படுத்தப்பட்ட விடையைத் தெரிவுசெய்க.
(1) வன்செய்தி, மென்செய்தி, வன்செய்தி, மென்செய்தி (2) வன்செய்தி, மென்செய்தி, மென்செய்தி, வன்செய்தி
(3) வன்செய்தி, வன்செய்தி, மென்செய்தி, மென்செய்தி (4) மென்செய்தி, வன்செய்தி, மென்செய்தி, வன்செய்தி

18. செய்திப்பத்திரிகையின் மிகப் பிரபலமான செய்தியொன்றைத் தெரிவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான உபாயமாக அமைவது
(1) வினாக்கொத்து முறை (2) உள்ளடக்க ஆய்வு
(3) விநியோகத்தர்களுடனான நேர்காணல் (4) அவதானிப்பு முறை

19. கீழே காட்டப்பட்டுள்ள வரைபடங்களைக் கருத்திற் கொள்க.




அவ்வரைபடங்களில்
(1) அனைத்தும் குறியீடுகள், அவற்றில் சில அடிப்படையில் வாய்மொழி சாராதவை
(2) அனைத்துமே குறியீடுகளாக இல்லாவிட்டாலும் சில அடிப்படையில் வாய்மொழி சார்ந்தவை
(3) அனைத்தும் வாய்மொழி சாராதவை, சில காட்சிவழித் தொடர்பாடலை நிகழ்த்துபவை
(4) அனைத்தும் வாய்மொழி சாராதவை, சில வாய்மொழிசார் தொடர்பாடலை நிகழ்த்துபவை

[பக். 3 ஐப் பார்க்க

20. ஒரே நிலைத்த நிலையிலிருந்தபடியே, உங்களுக்குச் சற்றுத் தொலைவிலுள்ள பொருளொன்றையும், உங்களுக்கு அருகேயுள்ள இன்னுமொரு பொருளையும் புகைப்படமெடுக்கும் தேவை உங்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதற்கு மிகப் பொருத்தமானது
(1) விரிந்த கோண வில்லைகள் (wide angle lens) (2) நெருங்கிச் செல்லும் வில்லைகள் (zoom lens)
(3) சாதாரண வில்லைகள் (normal lens) (4) குறுங்கோண வில்லைகள் (tele lens)

21. சமூகத்தில் 'பிம்பங்களைக் கட்டமைத்தல்' (image building) என்பது தொடர்பில் வகுப்பறைக் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

அமல் :- வெகுசன ஊடகங்கள் பெரும்பாலும் பிம்பக் கட்டமைப்பைச் செய்கின்றன.

விமல் :- விளையாட்டு, அரசியல், நடிப்பு போன்ற துறைகளிலிருந்தான நபர்கள் மாத்திரமே பிம்பங்களாக உருவாகின்றனர்.

கமல் :- பிம்பக் கட்டமைப்பல்ல; அதனைக் கட்டுடைப்பதும் கூட வெகுசன ஊடகங்களால் மேற்கொள்ளப்படுகின்றது.

மேற்குறித்த நபர்களில் சரியான கருத்துகளைக் கூறியவர்கள்
(1) அமல் மற்றும் கமல் மாத்திரம் (2) அமல் மற்றும் விமல் மாத்திரம்
(3) விமல் மற்றும் கமல் மாத்திரம் (4) அமல், விமல், கமல் ஆகிய மூவரும்

22. பாடமொன்றின் முடிவில் அது சம்பந்தமான பிரச்சினைகளை முன்வைப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளித்தல் ஆசிரியரொருவரின் கற்பித்தற்பாணியாக இருந்தது. இதைப் பற்றி அறிந்திருந்த சீதா, இன்றைய நாளிலும் தனக்குரிய வாய்ப்பிற்காகக் காத்திருந்தாள். அவளால் பயன்படுத்தப்பட்ட தொடர்பாடல் செயன்முறையின் பகுதி
(1) விளைவு (effect) (2) அனுபவங்களின் சட்டகம் (frame of experience)
(3) சூழலமைவு (context) (4) பின்னூட்டம் (feedback)

23. குறித்த அரசியற் கட்சியொன்று தேர்தல் ஒன்றில் தனது நிலைப்பாடு தொடர்பில் மக்களுக்குத் தெரியப்படுத்த விரும்பியது. இதற்காகக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் கட்சித் தலைவர்களால் குறிக்கப்பட்ட திகதியில், குறிக்கப்பட்ட நேரத்தில் தமது விடயங்களைத் தெரிவிப்பதாக முடிவு செய்யப்பட்டது. இந்த நிகழ்விற்காக பல்வேறு ஊடக நிறுவனங்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இது
(1) ஒரு நேர்காணல் (2) ஒரு பத்திரிகைக் குறிப்பு
(3) ஒரு பத்திரிகை மாநாடு (4) ஓர் உத்தியோகபூர்வ அறிவிப்பு

24. புலனாய்வு இதழியலில் நிகழ்த்தப்படுவது
(1) 'பீட்' நிருபர்களால் பெரும்பாலும் கைக்கொள்ளப்படும் அறிக்கையிடும் முறை
(2) உத்தியோகபூர்வ பொலிஸ் மூலங்களைப் பயன்படுத்தி அறிக்கையிடும் முறை
(3) சம்பவங்களுக்குச் சமாந்தரமாக அறிக்கையிடும் முறை
(4) மறைந்திருக்கும் தகவல்களைத் திரட்டியதன் பின்னர் அறிக்கையிடும் முறை

25. வானொலி நாடகம் பற்றிய **பொருத்தமற்ற** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) பல பாத்திரங்கள் இடம்பெற்றிருக்கும். (2) ஒலிக் குறிப்புகள் பெரும்பாலும் பயன்படுத்தப்படும்.
(3) உள்ளத்தில் உளத்தோற்றச் சித்திரங்கள் உருவாகும். (4) நிகழ்வினை தனித்துத்தெரியச் செய்ய இசை பயன்படும்.

26. நாளாந்தச் செய்திப்பத்திரிகையொன்றில் முதற்பக்கத்தில் பெரும்பாலும் உள்ளடக்கப்படும் செய்திகளாவன
(1) அரச செய்திகள் (2) வன் செய்திகள்
(3) உத்தியோகபூர்வ செய்திகள் (4) மென் செய்திகள்

27. டி. ஆர். விஜேவர்த்தன, எம். டி. குணசேன மற்றும் உபாலி விஜேவர்த்தன ஆகியோர் அங்கீகரிக்கப்படுவது
(1) இலங்கையின் கௌரவமிக்க செய்திப்பத்திரிகை ஆசிரியர்களாக
(2) இலங்கையில் தொலைக்காட்சியை அறிமுகப்படுத்திய முன்னோடிகளாக
(3) இலங்கை செய்திப்பத்திரிகைத் துறையில் குறிப்பிடத்தகுந்த பாத்திரங்களாக
(4) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிரபலமான நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களாக

28. செய்திப்பத்திரிகைக்கான புகைப்படங்கள் தொடர்பிலான சில கூற்றுகள் பின்வருமாறு:

A - கல்வியறிவற்ற மக்களுக்கு அவசியமானது.
B - செய்தியின் நம்பகத்தன்மை அதிகரிக்கிறது.
C - கவருந்தன்மையை செய்திப்பத்திரிகை பெறுகிறது.

மேற்குறித்தவற்றில் சரியான கூற்றுகளாக அமைவன
(1) A யும் B யும் மாத்திரம் (2) A யும் C யும் மாத்திரம்
(3) B யும் C யும் மாத்திரம் (4) A, B, C ஆகிய அனைத்தும்

29. பயிற்சிப் புகைப்படவியலாளர் ஒருவரின் பார்வையில், புகைப்பட நாடாவைக் கொண்டியங்கும் கமராக்களை விட எண்மான (digital) கமராக்கள் மிக முக்கியமானவையாக இருப்பது, புகைப்படங்களை அவற்றின் மூலம்
(1) உடனடியாகப் பார்வையிடலாம் என்பதால் (2) இலகுவாகச் சேமிக்கலாம் என்பதால்
(3) அதிகம் பேருக்கு அனுப்பலாம் என்பதால் (4) பெரிதாக்கி அச்சிடலாம் என்பதால்

30. தொலைக்காட்சி செய்தி பற்றிய **பொருத்தமற்ற** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) பெரும்பாலும் நேரடி நிகழ்வாக ஒளிபரப்பாகும்.
(2) ஊடக அலைவரிசைகளிடையே போட்டி காணப்படும்.
(3) வானொலிச் செய்தியை விட மிக வேகமானது.
(4) இயலுமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் காட்சிப் பிம்பங்கள் இணைக்கப்பட்டிருக்கும்.

[பக். 4 ஐப் பார்க்க

31. இணக்கப்படுத்தல், மத்தியஸ்தம் செய்தல், நடுநிலையான தீர்ப்பு வழங்கல் ஆகியவற்றை தனது செயற்பாடுகளாகக் கொண்ட, அச்சு ஊடகங்களுடன் தொடர்புடைய நிறுவனம்
(1) இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
(2) இலங்கை பத்திரிகைச் சபை
(3) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
(4) இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம்

32. ஒலியானது மின்னியல் சக்தியாக மாற்றப்பட்டு ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு அனுப்பப்பட முடியும் என்பதை முதற்தடவையாக வெளிப்படுத்திய நபர்
(1) அலக்சாண்டர் கிரஹம் பெல்
(2) தோமஸ் அல்வா எடிசன்
(3) ஜேம்ஸ் கிளார்க் மாக்ஸ்வெல்
(4) குக்லியல்மோ மார்க்கோணி

33. 10ஆம் 11ஆம் தரங்களில் பயிலும் மாணவர்களின் வாசிப்புப் பழக்கம் பற்றிய ஆய்வொன்றைச் செய்ய சீதா விரும்பினாள். இந்த ஆய்வில், குறித்த தரங்களில் பயிலும் மாணவர்கள் கருத்திற் கொள்ளப்படுவது
(1) ஆய்வின் மாதிரிகளாக
(2) ஆய்வின் சனத்தொகையாக
(3) ஆய்வின் இலக்குக் குழுவாக
(4) தகவல் தருபவர்களாக

34. "வானொலி, பெறுநரை மையப்படுத்திய ஓர் ஊடகம்" இதனால் கருதப்படுவது யாதெனில்,
(1) வானொலி நிகழ்ச்சிகளில் பெறுநரின் பங்களிப்பு உயர்வானது.
(2) பெறுநரின் விருப்பங்களுக்கேற்பவே தெரிவு மேற்கொள்ளப்படுகிறது.
(3) பெறுநரின் வேண்டுகோள்களுக்கு அதிக இடம் வழங்கப்படுகிறது.
(4) பெறுநரை இலக்குவைத்த நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன.

35. செய்திப் பத்திரிகையொன்றில் ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்தவர்களாக அமைபவர்கள்
(1) பிரதம ஆசிரியர், உதவி ஆசிரியர், புகைப்படவியலாளர்கள், பக்க வடிவமைப்பாளர்கள்
(2) துணை ஆசிரியர், செய்திக் கட்டுரை எழுத்தாளர்கள், விளம்பர முகாமையாளர், அலுவலக நிருபர்கள்
(3) பிரதம ஆசிரியர், விளம்பர முகாமையாளர், அச்சுப்பகுதி முகாமையாளர், விநியோக முகாமையாளர்
(4) இயக்குநர், பிரதம ஆசிரியர், உதவி ஆசிரியர், அலுவலக நிருபர்கள்

36. பயிற்சி பெறும் சந்தர்ப்பமொன்றுக்கு விண்ணப்பிப்பதற்காக சுயவிபரக் கோவை ஒன்றைத் தயாரிக்கும் தேவை உங்களுக்கு ஏற்பட்டுள்ளதாகக் கற்பனை செய்க. குறித்த பயிற்சிக்கு ஆட்களைத் தெரிவு செய்பவர்களின் கவனஈர்ப்பைப் பெறுவதில் **குறைந்த** முக்கியத்துவத்தைப் பெறுவது
(1) பொழுதுபோக்கு மற்றும் விசேட ஆர்வங்களைச் சுயவிபரக் கோவையில் உள்ளடக்கியிருப்பது
(2) அலங்கார எழுத்துகள் மற்றும் வர்ணத்தாள்களைப் பயன்படுத்தியிருப்பது
(3) உங்கள் வேண்டுகோள்கள் மற்றும் அர்ப்பணிப்புத் தொடர்பில் விபரித்து, மேலதிகக் கடிதம் ஒன்றைச் சமர்ப்பித்தல்
(4) ஆவணத்தைத் தயாரிப்பதில் A4 அளவுள்ள தாள்களை மாத்திரமே பயன்படுத்தியிருப்பது

37. அழும் குழந்தையொன்றின் முகம், தூரத்திலிருந்து பெண் ஒருவர் வருதல், பெண்ணின் அணுக்கப் படம் மற்றும் குழந்தை சிரிக்கும் நிலை ஆகியன படத்தொகுப்பாக்கம் செய்யப்பட்டன. இந்தப் படங்களினால் உருவாகும் அர்த்தம் அறியப்படுவது
(1) மொன்டாஜ் என
(2) பின்செல்லல் (flash back) என
(3) காட்சியின் தாங்குநிலை என
(4) இடைவெட்டு (inter-cut) என

38. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் மிக முக்கிய நபரொருவரின் நிலை பற்றி விவரிக்கும் உண்மையான அறிக்கையொன்றைப் பிரசுரிப்பது
(1) நியாயப்படுத்தக்கூடியது. ஏனெனில், அது அதிகம் பேரின் கவனத்தை ஈர்க்கக்கூடியது.
(2) ஒழுக்கநெறிக்கு மாறானதுடன் எப்போதும் செய்யப்படக் கூடாதது.
(3) சட்டவிரோதமான செயல் என்பதனால் தண்டனைக்கு உரியது.
(4) பொதுசன விருப்பத்திற்கு இசைவாகுமானால் ஏற்றுக்கொள்ளத்தக்கது.

39. பாடசாலையின் நூற்றாண்டு விழாவையொட்டி பாடசாலை ஊடகக் கழகத்தினால் திரைப்படமொன்றைத் தயாரிப்பதற்காகப் பின்வரும் காட்சிகள் படமாக்கப்பட்டன.

A - அதிபருடனான நேர்காணல்
B - அதிபர் அலுவலகம்
C - பாடசாலையின் முழுமையான தோற்றம்

பாடசாலையை அறிமுகப்படுத்துவதற்காக அர்த்தம் ஒன்றைத் தோற்றுவிக்கும் வண்ணம் மேலுள்ள காட்சிகளை இணைத்தால், அது அமையக்கூடிய தொடர்
(1) A, B மற்றும் C
(2) A, C மற்றும் B
(3) B, A மற்றும் C
(4) C, B மற்றும் A

40.
A - விளையாட்டு நிகழ்ச்சியொன்றின் வர்ணனை
B - தேர்தல் முடிவுகளின் ஒலிபரப்பு
C - பிரதான செய்தி அறிக்கை

மேற்குறித்தவற்றுள் வானொலியின் நேரலை நிகழ்ச்சிகளாக இடம்பிடிக்கக்கூடியன
(1) A யும் B யும்
(2) A யும் C யும்
(3) B யும் C யும்
(4) A, B, C ஆகிய அனைத்தும்

* *

[பக். 5 ஐப் பார்க்க

1944

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**87 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2014 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2014 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2014**

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය **I, II**
**தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் I, II**
Communication and Media Studies **I, II**

## தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் II

* **முதலாம்** வினாவையும் எவையேனும் **நான்கு** வினாக்களையும் தெரிவுசெய்து, மொத்தமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* **முதலாம்** வினாவுக்கு **20** புள்ளிகளும் ஏனைய எல்லா வினாக்களுக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** வானொலி ஊடகமொன்றால் நடாத்தப்பட்ட வினாடி-வினா போட்டியில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட ரவிக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பொன்று கிடைத்தது.

(i) வானொலி ஊடகத்துக்கே உரித்தான தனித்துவமான **இரண்டு** இயல்புகளைப் பெயரிடுக.

(ii) வினாடி-வினா நிகழ்ச்சியொன்றின் ஊடாக மேற்கொள்ளப்படவல்ல தொடர்பாடலின் **இரண்டு** நோக்கங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(iii) ரவி போட்டியில் வெற்றி பெற்றதான செய்தி நாளாந்தச் செய்திப்பத்திரிகைகள் பலவற்றில் அறிக்கையிடப்பட்டிருந்தது. செய்தித் தலைப்பில் இடம்பெறக்கூடிய **நான்கு** அம்சங்களை எடுத்துரைக்க.

(iv) குறித்த வெற்றி பற்றி தம்மால் தரப்பட்ட கடிதத்தின் பிரதியொன்றை வெளிநாட்டுப் பிரதிநிதிக்கு மிக விரைவில் அனுப்புமாறு ரவிக்கு மேற்படி வானொலி அலைவரிசை தகவலளித்தது. வெளிநாட்டுப் பிரதிநிதிக்கு குறித்த கடிதம் அனுப்புவதற்கு மிகப் பொருத்தமானதும் விரைவானதுமான வழிமுறையாக அமைவது எது ?

(v) இந்த வெற்றி தொடர்பிலான சுருக்கமான வானொலிக் கலந்துரையாடலுக்காக, வானொலியின் சிறுவர் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஒருவர் ரவியை அழைத்திருந்தார். வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஒருவரின் **இரண்டு** செயற்பாடுகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(vi) ரவி வெளிநாடு சென்று தங்கியிருக்கும் காலத்தில் தனது வீட்டிலுள்ளோருடன் இணையம் வழியாக எழுத்துமூலத் தொடர்பைப் பேணுவதற்கு அவருக்குள்ள மிக வசதியான முறை எது ?

(vii) மேற்படி இணையம் வழியாகப் பரிமாறப்படக்கூடிய வேறு **இரண்டு** வகைத் தகவல்களுக்கு உதாரணங்களை எழுதுக.

(viii) இணையவழித் தொடர்பிலுள்ள பலவீனம் காரணமாக தகவல் பரிமாற்றத்தில் பாதகமான விளைவுகள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன. ஷெனொன் மற்றும் வீவரின்படி, குறித்த சூழ்நிலைக்கு ஏற்ற தொடர்பாடல் வழிமுறையில் இடம்பெறும் அந்த காரணி பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(ix) வெளிநாட்டில் தங்கியிருக்கும் காலத்தில், தான் செல்லும் இடங்களின் புகைப்படங்களைத் தனது எண்மான (டிஜிட்டல்) கமராவினால் பதிவுசெய்ய ரவி எண்ணியுள்ளார். புகைப்படத் துறையில் எண்மானப் புகைப்படத் தொழினுட்பத்தின் **இரண்டு** தாக்கங்களைக் குறிப்பிடுக.

(x) தான் நாடு திரும்பிய பின்னர், தனது பயணம் பற்றிய விபரமான தகவல்களை தனது வகுப்பிலுள்ள நண்பர்களிடம் தெரிவிக்க ரவி எண்ணியிருந்தான். இந்த நோக்கத்திற்காக ரவி பயன்படுத்தக்கூடிய **இரண்டு** எறிவைகளைப் பெயரிடுக.

**2.** (i) "*சரசவி சந்தரச* முதலாவது சிங்களச் செய்திப்பத்திரிகையாகும்".
நீங்கள் மேற்படி கூற்றுடன் உடன்படுகிறீர்களா ? உங்கள் விடைக்கான காரணத்தைத் தருக.

(ii) "ஒரு நூலுக்கு முகப்பு அட்டை முக்கியமான ஒரு காரணியல்ல".
நீங்கள் மேற்படி கூற்றுடன் உடன்படுகிறீர்களா ? உங்கள் விடைக்கான **இரண்டு** காரணங்களைத் தருக.

(iii) "செய்தி அறிக்கையிடலில் தலைகீழ் பிரமிட்டு முறை மிகப் பொருத்தமானது".
நீங்கள் மேற்படி கூற்றுடன் உடன்படுகிறீர்களா ? உங்கள் விடையை **மூன்று** காரணங்களைத் தந்து விளக்குக.

(iv) "சினிமா இயக்குநரின் ஊடகம்".
நீங்கள் மேற்படி கூற்றுடன் உடன்படுகிறீர்களா ? உங்கள் விடையை **நான்கு** காரணங்களைத் தந்து விளக்குக.

[பக். 6 ஐப் பார்க்க

3. 'தொடர்பாடலின் செயற்பாடுகள்' என்னும் பொருளில், உங்கள் வகுப்பு மாணவர்களுக்குப் பேச்சொன்றை நிகழ்த்துமாறு நீங்கள் பணிக்கப்பட்டுள்ளீர்கள்.
   (i) இது, எந்த வகையான தொடர்பாடல் வகையினுள் உள்ளடங்குகின்றது ?
   (ii) உங்கள் பேச்சில் 'வெளிச்சவீட்டுத் தொழினுட்பம்' எவ்வாறு உங்களால் பயன்படுத்தப்படும் என்பதை விளக்குக.
   (iii) உங்கள் பேச்சினை மேலும் கவனயீர்ப்புக்குள்ளாக்குவதற்கு நீங்கள் பயன்படுத்த எண்ணியுள்ள **மூன்று** வாய்மொழி சாராத தொடர்பாடல் முறைகளைத் தனித்தனியாக விளக்குக.
   (iv) வெகுசனத் தொடர்பாடலின் **நான்கு** அடிப்படை இயல்புகளை விவரிக்குக.

4. பாடசாலை மெய்வல்லுநர் போட்டியில் இடம்பெற்ற ஒரு நிகழ்வு மரதன் ஓட்டமாகும்.
   (i) மரதன் ஓட்டப்பாதையை குறுக்கீடுகளற்றதாக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட பிரதான தொடர்பாடல் உபகரணம் எது ?
   (ii) செல்லிடத் தொலைபேசிகளிலுள்ள வீடியோ மூலம் மரதன் ஓட்டம் பதிவுசெய்யப்பட்டது. மரதன் ஓட்டத்துடன் தொடர்புடையதாக, செல்லிடத் தொலைபேசிகள் பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடிய வேறு **நான்கு** எடுத்துக்காட்டுகளைப் பெயரிடுக.
   (iii) வீடியோ காட்சிகளைக் கொண்டு குறித்த மரதன் பற்றிய சுருக்கமான விவரணத் திரைப்படமொன்றும் உருவாக்கப்பட்டது. விவரணத் திரைப்படமொன்றின் **மூன்று** முக்கிய பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.
   (iv) மரதன் ஓட்டம் சம்பந்தமான சுருக்கமான விவரணத் திரைப்படமொன்றில் பின்வரும் அளவுள்ள காட்சிகள் (shots) உள்ளடக்கப்பட்டிருந்தன. குறித்த அளவு ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான காட்சிகளை (scenes) தனித்தனியாக எடுத்துக்காட்டுக.
      (a) அணுக்கக் காட்சி (close-up)
      (b) நடுத்தரக் காட்சி (mid-shot)
      (c) நீண்டதூரக் காட்சி (long-shot)
      (d) மிக நீண்டதூரக் காட்சி (extreme long-shot)

5. (i) வீதிகளில் செல்லும் வாகனங்களை அவதானிப்பதற்காக சந்திகளில் பொருத்தப்படும் கமரா அமைப்புகளை அடையாளம் காணப் பயன்படுத்தப்படும் பதம் எது ?
   (ii) அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள ஊடகச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் **இரண்டு** நிறுவனங்களைப் பெயரிட்டு, அவை ஒவ்வொன்றும் ஒழுங்குபடுத்தும் வெகுசன ஊடக வகையைக் குறிப்பிடுக.
   (iii) வெகுசன ஊடக உரித்துடைமையின் **இரண்டு** பிரதான வகைகளைக் குறிப்பிட்டு, ஒவ்வொரு வகையிலும் அடங்கும் தொலைக்காட்சி அலைவரிசைகள் **இரண்டினதும்** வானொலிச் சேவைகள் **இரண்டினதும்** பெயர்களைக் குறிப்பிடுக.
   (iv) எளிமையான வகுப்பறை உபகரணமான கரும்பலகையைப் பயன்படுத்தும்போது கவனம் செலுத்த வேண்டிய **நான்கு** அம்சங்களைச் சுருக்கமாக விவரிக்குக.

6. நவீன், சுயாதீனமான செய்திப்பத்திரிகை ஊடகவியலாளராவார். அதேவேளை, வானொலி ஊடகமொன்றுடனும் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக அவர் தொடர்புகளைப் பேணிக் கொள்கிறார்.
   (i) நவீனுக்கு முக்கியமானதாக அமையும் **இரண்டு** சர்வதேச செய்தி முகவரகங்களைப் பெயரிடுக.
   (ii) உள்ளூர் செய்தி அறிக்கையிடலில் நவீன் பயன்படுத்தக்கூடும் என நீங்கள் எதிர்பார்க்கும் **நான்கு** செய்தி மூலங்களைச் சுருக்கமாக விளக்குக.
   (iii) தயாரிப்பு பணியில் நவீன் பங்களிக்கக்கூடிய, **மூன்று** வகை வானொலி நிகழ்ச்சிகளைத் தனித்தனியாக விவரிக்குக.
   (iv) செய்திப்பத்திரிகையிலும் வானொலி ஊடகத்திலும் பயன்படும் மொழி தொடர்பில் அவதானிக்கப்படக் கூடிய **நான்கு** முக்கிய வேறுபாடுகளை உதாரணங்களுடன் விளக்குக.

7. வெகுசன ஊடகச் செய்திகளைச் சரியாக உள்வாங்கிக் கொள்வதன் மூலம் பெறுநர் அறிவார்ந்த பிரசையாகின்றார்.
   (i) வெகுசன ஊடகப் பெறுநர்களின் **இரண்டு** பிரதான வகைகளைப் பெயரிடுக.
   (ii) மேற்குறித்த இரண்டு வகைப் பெறுநர்களும் கொண்டிருக்கக்கூடிய இயல்புகள் **இரண்டு** வீதம் தனித்தனியாகக் குறிப்பிடுக.
   (iii) சிறுவர்கள் மீது வெகுசன ஊடகங்கள் ஏற்படுத்தவல்ல **மூன்று** எதிர்மறை விளைவுகளைச் சுருக்கமாக விவரிக்குக.
   (iv) விழிப்புணர்வுள்ள பெறுநர் கொண்டிருக்க வேண்டிய **நான்கு** அடிப்படைத் தகுதிப்பாடுகளைத் தனித்தனியாக விவரிக்குக.

* * *